REGISTERED AS A CATHOLIC WEEKLY. P.197

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் 124 இதழ் 05 விலை ரூபா 5 15சித்திரை –30சித்திரை 1999

**பங்குகளில் பாதுகாவலன் விற்பனை விபரம்**

| | |
|---|---|
| இளவாலை | - 130 |
| தாளையடி | - 55 |
| ஏழாலை சுன்னாகம் | - 15 |
| அச்சுவெலி | - 45 |
| மிருசுவில் | - 125 |
| கரவெட்டி | - 50 |
| சாவகச்சேரி | - 71 |
| முகமாலை | - 25 |

UNIVERSITY OF JAFFNA LIBRARY MAY 1999 PERIODICALS DIVISION


# மடுத்திருப்பதியின் மதிப்பும், புனிதமும் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும்

## ★ மன்னார் ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை பாதுகாவலனுக்குப் பேட்டி

அண்மையில் அருள்திரு பொன்னையா அடிகளின் இறுதிப் பயணத்தில் கலந்துகொள்ள யாழ் நகருக்குத் திடீர் விஜயத்தை மேற்கொண்ட மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை மடுப்பதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பது பற்றி தமது கருத்தைப் பாதுகாவலன் பத்திரிகைக்குத் தெரிவிக்கும் போதே மடுத்திருப்பதியின் புனிதமும், மதிப்பும் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

மடுப்பதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதை நாம் எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. மடுத் தேவாலயத்தில் படையினர் நிலை கொண்டிருப்பது பற்றி வத்திக்கானில் பாப்பரசருக்கும், இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் அனைவருக்கும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க அவர்களுக்கும் உடனடியாகவே நாம் அறிவித்துள்ளோம். இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் உடனடியாகவே எம்மோடு தொடர்பு கொண்டு இராணுவத்தினர் மடுப்பதியைவிட்டு வெளியேற வேண்டுமென்ற எமது நிலைப்பாட்டை தாமும் வலியுறுத்தவதாகவும் ஆயர் மன்றக் கூட்டத்தின் பின்னர் கூட்டாக அறிக்கையொன்றை விடுவதாகவும் தெரிவித்தனர். ஜனாதிபதியும் தொலைபேசியில் எம்மோடு தொடர்புகொண்டார்.

ஆலயம் அமைந்துள்ள பகுதியில் இருந்து 200 அல்லது 300யார் தூரத்தில் காவலரண்களை அமைத்துள்ள படையினர் மரங்களை வெட்டுகின்றார்கள்; மதுபானங்களை அங்கு வைத்துக் குடிக்கிறார்கள்; ரி. வி. பார்க்கிறார்கள் களியாட்டங்கள் நடக்கின்றன. இவை எல்லாம் ஆலயத்தின் புனிதத்தை மாசுபடுத்துகின்றன என்று தெரிவித்தார்.



"சுதந்திரமான மடு யாத்திரை கிறிஸ்தவர்களது உரிமை! அந்த வரத்தைப் பெற்றுத்தந்த ஜனாதிபதிக்கும், படைவீரர்களுக்கும் மடுப் பிரதேச வாசிகளது ஆசீர்வாதம்!"

கொழும்பில் அடிக்கப்பட்ட சுவரொட்டிகளையும் அதில் பதிக்கப்பட்ட வசனங்களையும் மேலே காண்கிறீர்கள்.

## முருங்கன் பங்கு மக்கள் கிளி-முல்லைக்கு உதவி

முருங்கன் பங்கு மக்கள் அருள்திரு ஜெயபாலன் குருஸ் அடிகளின் வழிகாட்டுதலில் தம்மால் சேர்க்கப்பட்ட நிதியுதவியினை இராணுவ நடவடிக்கைகளினால் துன்பப்படும் கிளி-முல்லை மறைக் கோட்டத்தினருக்கு நான்கு தடவைகள் அனுப்பி உதவிசெய்துள்ளனர். இந்த நிதியுதவி சேகரிப்பில் முருங்கன்பங்கிலுள்ள அநாதை மடத்தினரும் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது.

# மேய்ப்புப்பணியில் கிளி-முல்லை மறைக்கோட்டத்தினர் மிகவும் ஆர்வமாய் இருப்பது நம்பிக்கை தருகிறது.

~ கிளி/முல்லை மறைக்கோட்ட முதல்வர் ப. இருதயதாஸ் ~

அண்மையில் யாழ் நகருக்கு விஜயம் செய்த கிளி - முல்லை மறைக்கோட்ட முதல்வர் அருள்திரு ப. இருதயதாஸ் அடிகளை பாதுகாவலன் சார்பில் சந்தித்து உங்கள் மறைக் கோட்டத்தில் நடைபெற்ற மேய்ப்புப்பணி அமர்வின் பின்னர் செயல்பாடுகள் எப்படி இருக்கின்றன என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "மேய்ப்புப் பணியில் கிளி-முல்லை மறைக்கோட்டத்தில் மிகவும் ஆர்வமாய் இருப்பது நம்பிக்கை தருகிறது. எம்முடைய திட்டங்களை கடந்த பாதுகாவலனிலும் போட்டிருந்தீர்கள். மிகவும் நெருக்கமாக போடப்பட்ட அத்திட்டத்தின்படி பங்குத் தந்தையர்களும் இறை மக்களும் செயற்படுகின்றார்கள். குறிப்பாக அன்பியங்கள் நன்கு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இது எமது மறைக்கோட்டத்தின் வளர்ச்சிக்கு நல்ல உதாரணமாக இருக்கிறது என்று சொன்னார். இதற்காக ஏற்பட்ட செலவுகளின் ஒரு பகுதியைப் பங்குகளில் இருந்து மக்கள் தாராள மனத்தோடு தந்துதவினார்கள். முழுத் தொகையின் அரைப்பகுதியை ஆயர் அவர்கள் தந்துதவினார்" என்றார்.

மடு இராணுவ நடவடிக்கையின் போது உங்களுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள் என்ன என்று கேட்டபோது மல்லாவி, மடு வீதி இப்போ தடைப் பட்டுள்ளது. இதனைவிட இராணுவ நடவடிக்கைகளால் உணவின் வருகையும், பெரிதும் தடைப் பட்டுள்ளது. சில இடங்களில் மக்கள் இடம் பெயர வேண்டி இருந்தது. குறிப்பாக ஷெல்லடிகளைத் தாங்கிக்கொள்ள முடியாமல் வவனிக்குள பங்கு மக்கள் எல்லோரும் பங்குத்தந்தை M.X. கருணாரட்ணம் அடிகளோடு மல்லாவி நோக்கி நகர்ந்து தற்காலிகமாக தங்கியிருக்கின்றார்கள், என்று மேலும் தெரிவித்தார்.

## நற்செய்தி அறிப்புப் பணியில் புனித சின்னப்பரைப் போல் இறுதிவரைஅயராது உழைத்தவர் அருள்திரு பொன்னையாஅடிகள்

அண்மையில் காலமான யாழ் மறை மாவட்டத்தின் மூத்த குருக்களுள் ஒருவரான அருள்திரு பிலிப் பொன்னையா அடிகளின் இறுதி யாத்திரையில் கலந்து கொள்ள யாழ் வந்த மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசவ் ஆண்டகை திருப்பலியின் போது மறையுரை ஆற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நூற்றாண்டில் இரண்டு முக்கிய மனிதர்கள் பணியாற்றியுள்ளனர். ஒருவர் யாழ் நகரில் பணி புரிந்த சுவாமி ஞானப்பிரகாசர். அடுத்தவர் கிளிநொச்சிப் பகுதியில் பணி புரிந்த சூசைநாதன் அடிகள். எங்களுள் அனேகமானவர்களுக்கு இவர்களைப் பார்க்கவும், இவர்களோடு பணிபுரியவும் கொடுத்து வைக்கவில்லை. ஆனால் இவர்களுடைய வாழ்வையும், பணியையும் தம் வாழ்வாலும், பணியாலும், படம் பிடித்துக் காட்டியவர் அருள்திரு பொன்னையா அடிகள்.

நற்செய்தி அறிவிப்புப் பணியில் புனித சின்னப்பரைப் போல் இறுதிவரை அயராது உழைத்தவர் அருள்திரு பொன்னையாஅடிகள். அவரின் பணி என்றும் மறக்கப்படமாட்டாது என்றும் மேலும் தெரிவித்தார்.

## நற்செய்தி அறிவியுங்கள்

இன்று அறுவடை செய்யும் நாள். கடந்த மூன்றுமாத பயிற்சியின் போது பல விடயங்களைக் கற்றீர்கள். எப்படி அவற்றை செயற்படுத்துவதென்றும், வாழ்வில் எப்படி கையாள்வதென்றும் கற்றுக் கொண்டீர்கள். இனி உங்கள் பங்குகளுக்குச் சென்று பிறருக்கு இதனை அறிவிக்கும் படியாகவே இப்பயிற்சி உங்களுக்கு அளிக்கப்பட்டது. இது உயிர்த்த ஆண்டவர் உங்களுக்குத் தந்த பணி. இப்பணியில் நீங்கள் சஞ்சலம் அடையத் தேவையில்லை. ஏனெனில் ஆண்டவர் உங்களோடு இருக்கிறார்.

இவ்வாறு மறையாசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தின் போது யாழ் ஆயர் பேரருட்திரு சவுந்தரநாயகம் அவர்கள் கூறினார்.

இம்மாதம் 12 ஆம் திகதி மூன்று மாத மறையாசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்ட 60 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு செல்வராஜா அடிகளால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மறையாசிரியர் சௌந்தரம் அவர்கள் பயிற்சிபற்றிய அறிக்கையை வாசித்தார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

ஆண்டவ[illegible]ரக காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி . பா. 127- 1)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

## எம்கருத்து

### இராணுவத்தினர் வெளியேற வேண்டும்

ஆண்டாண்டு காலமாக சிங்களவர், தமிழர் என்ற வேறுபாடுகளை மறந்து கத்தோலிக்கர் என்ற நிலையில் இணைந்து விழாக் கொண்டாடப்பட்டு வந்த இடம் மடுப்பதி என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஐந்நூறு வருடங்கள் பழமையான, நானூறு ஏக்கர் பரப்பளவுள்ள மடுப்பதியானது புனித பிரதேசமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதைமீறும் செயலாகவே அண்மையில் மடுப்பதியில் இராணுவ ஆக்கிரமிப்பு நடைபெற்றிருக்கிறது.

தேர்தல் களத்தில் வாக்குகளைப் பெறும் நோக்கோடு நடத்தப்பட்ட மடுப்பதி நோக்கிய இந்தப் படை நகர்வு பின்னர் மூடி மறைக்கப்பட்டது. "சுதந்திரமான மடு யாத்திரை கிறிஸ்தவர்களது உரிமை அந்த வரத்தைப் பெற்றுத் தந்த ஜனாதிபதிக்கும், படை வீரர்களுக்கும் மடுப் பிரதேசவாசிகளது ஆசீர்வாதம்" என்ற வாசகங்களுடன், வெளியிடப்பட்ட சுவரொட்டிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இராணுவத்தினர் மடுப்பதியை விட்டு முற்றுமுழுதாக வெளியேறவேண்டும் என்ற மன்னர் ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகையின் உறுதியான பிடி அரசாங்கத்தினரை கதிகலங்க வைத்துள்ளது. யாழ் ஆயரும் தமது ஈஸ்ரர் செய்தியில் இராணுவத்தினர் மடுப்பதியை விட்டு வெளியேற வேண்டும் என்ற மன்னார் ஆயருடைய நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் மன்னார் ஆயர் யாழ் நகர் வந்த போது யாழ் மறை மாவட்ட ஆயரும் குருக்களும் மன்னார் ஆயருடைய நிலைப்பாட்டை வெகுவாகப் பாராட்டுவதாகவும் வலியுறுத்துவதாகவும் செபத்தில் அவரோடு இணைந்திருப்பதாகவும் உறுதி கொடுத்தனர்.

யாழ் மறைமாவட்டத்திலும் அரசின் இந்த செயற்பாட்டை எதிர்த்து செபத்தோடு கூடிய உண்ணாவிரதத்தை மேற்கொண்டதோடு மகஜர் ஒன்றையும் தயாரித்து ஜனாதிபதிக்கும் இலங்கை ஆயர் மன்றத்தினருக்கும் அனுப்பத் திட்டமிட்டுள்ளனர். இராணுவத்தினர் மடுப்பதியின் புனிதத் தன்மைக்கு எந்த விதமாகும் ஏற்படாத வகையில் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை நாமும் வலியுறுத்த விரும்புகின்றோம். இலங்கைக் கத்தோலிக்க மக்கள் அனைவரும் இன பேதமின்றி ஒன்றாக இணைந்து வலியுறுத்த வேண்டுமென்று விரும்புகின்றோம்.

# சமூகத் தொடர்புசாதனங்களுக்கு ஓர் அறிமுகம்

## பயிற்சிப் பட்டறை

யாழ் மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு "சமூகத் தொடர்பு சாதனங்களுக்கு ஓர் அறிமுகம்" என்ற பயிற்சிப் பட்டறை 27, 28-02-99 இல் நடைபெற்றது. பாதுகாவலன் எழுத்தாளர் நிருபர்களாக 50 பேர் கலந்து கொண்டனர். மேற்படி பட்டறையின் தொகுப்பினை இரண்டு பகுதிகளாக வழங்குகின்றோம். முதல் பகுதியில் நடந்த விபரங்களை கி. எமில் செல்மரும், இரண்டாவது பகுதியில் உரைகளின் தொகுப்பை F. X. கிறிஸ்ரி ரஞ்சனும் வழங்குகின்றார்கள்.

### பட்டறையில் எழுந்த பதிவுகள் — கி. எமில் செல்மர்

யாழ் மறை மாவட்ட 'சமூகத் தொடர்பு சாதன ஆணைக்குழு' வின் ஏற்பாட்டில் 'பாதுகாவலன்' பத்திரிகையின் ஆசிரியர் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டு மறைக்கல்வி நடுநிலையத்தில் கடந்த பெப்ரவரி 27 சனி 28 ஞாயிறு ஆகிய தினங்களில் நடத்தப்பட்ட 'சமூகத் தொடர்பு சாதனங்களுக்கு ஓர் அறிமுகம்' என்ற இரு நாள் பயிற்சிப் பட்டறை பல புதிய தகவல்களை, அனுபவங்களைத் தந்த ஒரு இனிய நிகழ்வாக அமைந்தது.

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களுடன், ஒவ்வொரு பங்குகளில் இருந்தும் அழைக்கப்பட்டிருந்த இரு பிரதிநிதிகளும் அடங்கலாக 50 பேர் வரையிலானோருக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இப்பட்டறைக்கு பாண்டியன் தாழ்வு பங்கு சார்பாக நான் என் சக பிரதிநிதியுடன் 27ஆம் திகதி காலைப் பொழுதில் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தினுள் நுழைந்து கொண்டேன்.

புதிய எதிர்பார்ப்புக்கள் மனம் முழுவதும் வியாபித்துக் கொள்ள மண்டபத்தினுள் நுழைந்த எனக்கு முன்னைய நினைவுகளும் எழாமல் இருக்கவில்லை. நான்கு வருடங்களுக்கு முன்பு 1995 செப். 23ஆம், 24ஆம் திகதிகளில் இரவுப் பொழுதையும் உள்ளடக்கியதாக (இம்முறை இரவுப் பொழுது ஊரடங்கு வாழ்வால் அனுபவிக்க முடியாததாக இருந்தது.) இதே தலைப்பில் அமைந்த பட்டறையில் கலந்து கொண்டதும், செயல்பட்டதும், தொடர்ந்து பல புதிய முன்னெடுப்புக்களுக்கு ஆயத்தப்படுத்தியதும் அதன் பின் பெருந் துயராக வந்து சென்ற 'இடப்பெயர்வு' அனைத்து எண்ணங்களையும் சிதறடித்துச் சென்றதையும் . . .

இப்போது மீண்டும் புதியவர்களுடன் இப்பட்டறையில் கலந்து கொள்கின்றேன். அப்போது, நான்கு வருடங்களுக்கு முன்னர் கண்ட ஒரு சில முகங்களைத் தவிர அனைவருமே புதியவர்கள். நான்கு வருடங்களுக்கு முன்னர் இப்பட்டறையில் கலந்துகொண்டு தொடர்ந்து செயல்படுவோம் என உறுதி எடுத்த மிகுதிப் பேர் எங்கே போனார்கள்? அவர்களில் பலர் இப்போது இம் மண்ணில் கூட இருக்கமாட்டார்கள். அது தான் இம் மண்ணின் காலம் எழுதிய வரிகளாயிற்றே. . .

இனியாவது. நல்ல காலங்கள் பிறக்குமா? இம்முறை இப்பட்டறையில் பங்குபற்றுபவர்களாவது முழுமையாக செயல்பட்டு எமது கத்தோலிக்க திருச்சபைக்கும் தமிழ் அன்னைக்கும் தம் படைப்புக்களால் வலுச் சேர்க்க வேண்டும் என மனதிற்குள் மன்றாடிக் கொண்டேன்.

பத்திரிகையியல், சினிமா, கணணி ஆகிய தொடர்பூடகங்களை மையப்படுத்தி இடம்பெற்ற இப்பட்டறையின் முதலாவது நிகழ்வு காலை 9.15 மணியளவில் ஆரம்பமாகியது. ஆரம்ப நிகழ்வாக தியானம் இடம்பெற்றது.



தியான நெறிப் படுத்தல் அருள் திரு ரவிச் சந்திரன்

இதனை அருள்திரு ம. வி. இ. இரவிச்சந்திரன் அடிகளார் நிகழ்த்தினார். தியானத்தின் மூலம் எம் மனங்களை ஒரு நிலைப்படுத்த முடிந்தது. அதனைத் தொடர்ந்து வழமையான நிகழ்வுகளான வரவேற்புரை, ஆசியுரை என்பன இடம்பெற்றன.

வரவேற்புரையை ஆற்றிய யாழ் மறை மாவட்ட சமூகத் தொடர்பு சாதன ஆணைக்குழுவின் இயக்குனரும், 'பாதுகாவலன்' ஆசிரியருமான அருள்திரு ரூபன் மரியாம் பிள்ளை அடிகளார் குறிப்பிடுகையில் "எமது நீண்ட கால எண்ணங்கள் இன்று நிறைவேறுகின்றது. இந்த சந்தர்ப்பத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்தி எமது ஆவலையும் பூர்த்தி செய்வீர்கள் என்று நம்புகிறோம்" என்றார்.



ஆசியுரை ஆற்றுகிறார் அருள்திரு J.நீக்கிலஸ்

ஆசியுரை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபரான அருள் திரு ஜே. நீக்கிலஸ் அடிகளார் வழங்கினார். அதில் அவர் "விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நீங்கள் அனைவரும் விழித்தெழ வேண்டும்" என்றார். அதனைத் தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கிடையிலான அறிமுகம் இடம்பெற்றது. இதனை எழுத்தாளர் திரு ஜோசப்பாலா நெறிப்படுத்தினார்.

இதன்பின் கருத்துரைகள் ஆரம்பமாகின. முதலாவதாக 'சமூகத் தொடர்பு சாதனங்களும் கிறிஸ்தவர் களாகிய நாமும்' என்னும் பொருளில் யாழ் பல்கலைக் கழக கிறிஸ்தவ 'நாகரீகத்துறை தலைவர். அருள்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகளார் வழங்கினார்.

கிறிஸ்து அன்று எவ்வாறு உண்மையுள்ள பத்திரிகையாளனுக்குரிய பண்புகளைத் தாங்கி வாழ்ந்தாரோ, அவ்வாறே இன்றைய பத்திரிகையாளனும் கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் செயற்பட வேண்டும். சமூகத் தொடர்பு சாதனப் பாதை எல்லா சிந்தனைகளுக்கும் இடம் கொடுக்க வேண்டும். மக்களின் தேவையை எடுத்துச் சொல்ல வேண்டும். முன்னோக்கிய பார்வையுடன் சவால்களை எடுத்துரைக்க முன்வர வேண்டும் என்றார்.

பின்னர் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் திரு. எஸ் கதிர்காமத்தம்பி அவர்கள் தனது நீண்ட 35 வருடகால பத்திரிகைத்துறை அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார். அதில் அவர் ஒரு பத்திரிகையாளன் எவ்வாறு மக்களின் குரலாக செயற்பட வேண்டும் என்பதை தன் அனுபவத்தின் மூலம் எடுத்துக் கூறினார். மேலும் பத்திரிகையாளன் எல்லாத் துறைகளிலும் சிறிதளவிலாவது அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து குழு ஆய்வு இடம் பெற்றது. பத்திரிகையின் தெரிவும், ரசனையும் செய்தி சேகரிப்பும், பத்திரிகைகளுக்கு வழங்கலும் என்னும் விடயங்களில் இடம் பெற்ற இவ் ஆய்வை திரு ஜோசப் பாலா அவர்கள் நெறிப்படுத்தினார். அதன்போது பத்திரிகையாளர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, கையெழுத்து சஞ்சிகை தயாரிக்கும்படி விடப்பட்டார்கள்.

தொடர்ந்தும் 'சலன விம்பங்களின் காட்சி மொழி' என்னும் விடயத்தில் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திரு. பா. அகிலன் அவர்கள் கருத்துரையாற்றினார். திரைப்படங்களில் காட்சி மொழிப் பிரயோகம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவரது உரை மூலம் தெளிவாக அறிந்திட முடிந்தது.

மதிய உணவுக்காக வழங்கப்பட்ட இடைவேளையைத் தொடர்ந்து மாலை நேர அமர்வு இடம்பெற்றது. 'திரைப்படத் திறனாய்வு' ஒன்றை பல படங்களையும் தொலைக்காட்சியில் சிறு சிறு பகுதிகளாகப் போட்டுக் காண்பித்து, அதன் மூலம் நல்ல படங்களை எப்படி எதைக் கொண்டு தெரிவு செய்து கொள்வது என்பது பற்றியெல்லாம் சிறப்பான முறையில் அருள்திரு ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளார் விளக்கமளித்தார்.

மாலை 4 மணியளவில் முதலாம் நாள் பட்டறை நிறைவு பெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஞாயிறு காலை 9.30 மணியளவில் அரம்பமாகியது. தொடக்கவுரையை ஓய்வு பெற்ற ஆசிரியையான திருமதி மேரி நாயகி (நவாலி யூர் நாயகி) அவர்கள் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து தனது பத்திரிகைத்துறை அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொள்ள வருகை தந்திருந்த, யாழ் நகரிலிருந்து வெளிவரும் ஒரேயொரு தினசரிப் பத்திரிகையான உதயனின் இணையாசிரியரான திரு ந.வித்தியாதரன் அவர்கள் தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. வித்தியாதரனின் அனுபவப்பகிர்வு

ஒரு பத்திரிகை நடாத்துவதில் அதுவும்யாழ்ப்பாணத்திலிருந்து பத்திரிகையை வெளியிடுவது என்பது எத்தகையதொரு ஆபத்தான விடயம் என்பதை அதன் மூலம் அறிய முடிந்தது. பத்திரிகை நடத்துவது நெருப்பாற்றை நீந்திக் கடப்பதற்கு ஒப்பானது என்பார்கள். அதனை அனுபவத்தில் கேட்டபோது அனைவரது கண்களும் கலங்கின. இம் மண்ணில் காலத்திற்கு காலம் ஏற்படும் அரசியல், இராணுவ சூழ்நிலை மாற்றங்கள் ஒரு பத்திரிகையை, பத்திரிகையாளன்னை எப்படியெல்லாம் பாதிக்கின்றது. ஒரு செய்தியைப் பிரசுரித்துவிட்டு அதன் பின்னால் அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகள் என்பவற்றையெல்லாம் மிகவும் உணர்வு பூர்வமாக எடுத்துக் கூறினார். பயிற்சியாளர்களின் பல்வேறுபட்ட கேள்விகளுக்கும் பதில் அளித்தார். காலை நேரம் முழுவதையும் இழுத்திருந்த இந்த அனுபவப் பகிர்வு பயனுள்ளதாகவே இருந்தது.

மதிய உணவு இடைவெளிக்கு பின்னர் 'சமூகத் தொடர்பாடலில் கணணித்துறை' என்னும் பொருளில் யாழ் நகரில் இயங்கும் I.I.S நிறுவனத்தின் கணணி விரிவுரையாளர் திரு எஸ். பிரபாகரன் அவர்கள் கருத்துரை வழங்கினார். அவரது உரையின் மூலம் நவீன உலகில் கணணியின் செயற்பாடுகள் இன்னும் இன்டர் நெட், ஈமெயில் பற்றியெல்லாம் அறியாத பல விடயங்களை அறிந்துகொள்ள முடிந்தது. வினாக்களுக்கும் விடையளித்தார். இதுவே இறுதி கருத்துரையாக அமைந்தது.

இதன் பின் பொது அமர்வுகள் இடம் பெற்றது. நான்கு குழுக்களினாலும் தயாரிக்கப்பட்டிருந்த மாலை முரசு, உண்மை, கதிரொளி, வசந்தம், கையெழுத்துச் சஞ்சிகைகள் குறித்த விமர்சனம் இடம் பெற்றது. இதனை திரு. F. X. கிறிஸ்ரி ரஞ்சன் அவர்கள் வழங்கினார். அவர் அப்பத்திரிகைகளில் உள்ள குறை, நிறைகளை சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து, நான்கு குழுக்களின்தும் பட்டறை தொடர்பான குழு அறிக்கைகளை அக்குழுக்களின் பிரதிநிதிகள் வழங்கினார்கள்.

இறுதி நிகழ்வுகளாக பிரதம விருந்தினர் உரையும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம் பெற்றது. பிரதம விருந்தினராக எமது யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகை அவர்கள் வருகை தந்திருந்தார். அவர் உரையாற்றுகையில், இப்பயிற்சிப் பட்டறையை ஒழுங்கு செய்த நடாத்திய பாதுகாவலன் ஆசிரியரைப் பாராட்டி "இது போன்ற எழுத்துப் பட்டறைகள் மிக நீண்ட கால இடைவெளிகளில் அல்லாது அடிக்கடி வைக்கப்பட்டு இதனால் பாதுகாவலன் பத்திரிகையும் வளர்ச்சியடைந்து, திருச்சபைக்குப் பயனுள்ளதாய் இருக்க வேண்டும்" என்றார். தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை யாழ் ஆயர் வழங்கினார்.



ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உரை வழங்குகிறார்.

அதனைத் தொடர்ந்து சமூகத் தொடர்புசாதன ஆணைக்குழு செயலாளர் திரு. ஜோசப்பாலா அவர்கள் நன்றியுரையை ஆற்றினார். அந்த நிகழ்வுடன் இருநாள் பயிற்சிப் பட்டறை இனிதே நிறைவுற்றது.


மிகப்பெரிய பரந்த ஊடகங்கள் பற்றிய அறிவை இருநாளில் முழுமையாக வழங்கவும் முடியாது. பெறவும் முடியாது. ஆனால் அவை குறித்து அறிந்திராத புதிய தகவல்களை பெற்ற நிறைவுடன், பயிற்சியாளர்கள் அனைவரும் இணைந்திருந்து புகைப்படம் எடுத்துக் கொண்ட பின்னர் மாலை 4 மணிக்குச் சற்றுப் பின்னதாக மண்டபத்தைவிட்டு வெளியேறினோம்.

இப்பட்டறையின் சிறப்பு என்னவெனில் பொருத்தமான விடயங்களுக்கு தகுதியான கருத்துரையாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். அவர்களும் தம் பணிகளை சிறப்பாக நிறைவேற்றியிருந்தார்கள்.

இனி என்ன?

இப்பட்டறையில் கலந்து கொண்ட பயிற்சியாளர்கள் அனைவரும் தம் பங்குகளுக்குரிய பாதுகாவலன் செய்தியாளர்களாகப் பணிபுரிவதை வரவேற்கிறார்கள். அப்பணியை நிறைவாகச் செய்திட பயிற்சியாளர்கள் அனைவரும் முன்வரல் வேண்டும்.

அடுத்து, இது போன்ற நல்ல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை யாழ் மறை மாவட்ட சமூகத் தொடர்பு சாதன ஆணைக்குழு மின்னி மறையும் மின்னலைப் போன்று இருந்துவிட்டு எப்போதாவது நடத்தாது, அடிக்கடி நடத்துதல் ஆக்கபூர்வமான மனிதர்களை வளர்த்தெடுக்க உதவும். அதன் மூலம் எமது யாழ் திருச்சபைக்கு பல கத்தோலிக்க படைப்பாளிகளை உருவாக்கி வழங்க முடியும்.



ஆயருடன் மகிழ்ந்து நிற்கின்றனர் பயிற்சியாளர்கள்.

இறுதியாக, இப்படியொரு பெறுமதியான பயிற்சிப் பட்டறையை ஒழுங்கு செய்து நடத்திய சமூகத் தொடர்பு சாதன ஆணைக்குழுவினர், ஒழுங்கமைத்த பாதுகாவலன் ஆசிரியர் குழுவினர் அனைவரும் நன்றிகளுக்கும், பாராட்டுக்களுக்கும் உரியவர்களாகின்றார்கள்.

(இதன் அடுத்த பகுதி அடுத்த இதழில்)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



யுஸ்ரெலா யஸ்மின் கிறிஸ்ரியன்

மலர்வு: 26-09-1956 உதிர்வு: 22-04-1984

ஆண்டுகள் "மூவைந்து" கடந்திட்ட போதினிலும்
"தாயே". . உன் பூமுகம் என்னும் எம்மை விட்டு
அகலவில்லையே!
"யஸ்மின்",. . . உன் நாமம் ஏற்றது போல்
உன் வாசனை என்றென்றும்
எம்மை எல்லாம் ஆழ்துயரில்
அல்லவா ஆழ்த்துகின்றது.

இவரின் பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பாசமகள், பெற்றோர்,
சோதரர், சோதரிகள், மாமி, மைத்துனர்,
உறவினர், நண்பர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

இல. 01 புனித யூதா அவெனியூ
அரியாலை. A/11/99

## 31 ஆம் நாள் நினைவு



மலர்வு 11.07.16 உதிர்வு 06.03.99

திருமதி அந்தோனியாப்பிள்ளை
றோசம்மா ஆசீர்வாதம்

"உயிர்ப்பும் உயிரும் நானே.
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"
அரு.11:25

**செபம்**

அன்பும் இரக்கமும் நிறைந்த
இறைத் தந்தையே!
இவ்வுலகில் விசுவாசிகளின்
கூட்டத்தில் இடமளித்து
உம்மிடம் அழைத்துக்
கொண்ட உமது அடியாள்
அந்தோனிப்பிள்ளை றோசம்மா
ஆசீர்வாதம் அவர்களுக்கு
நித்திய இளைப்பாற்றியை
அளித்தருளும். ஆமென்

இவரது பிரிவால் துயருறும்
ஆசீர்வாதம்
குடும்ப அங்கத்தவர்கள்.

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ம. சூசைப்பிள்ளை
இளைப்பாறிய ஆசிரியர்
(ஒட்டகப்புலம்)

அன்னை மடியில் 10-12-1916
ஆண்டவன் அரவணைப்பில் 11-04-1984

ஆண்டுகள் 15 ஆகியும்
உம் நினைவுகள் எம்
நெஞ்சங்களை
நனைக்கின்றன ஐயா!

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

இல.5 மாட்டீன் லேன்
யாழ்ப்பாணம் A/12/99

## மரண அறிவித்தல்



செல்வி திரேசா
அந்தோனிப்பிள்ளை
(முன்னாள் புனித பத்திரிசிரியார் கல்லூரி ஆசிரியை)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், 160.யாழ். பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி திரேசா அந்தோனிப்பிள்ளை 13-04-99 இல் இறைவனடி சேர்ந்துள்ளார். இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை ஆனாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற சவிரிமுத்து சில்லாலை முத்துவைத்தியர் செபஸ்தியாம்பிள்ளை, திருமதி சூசானம்மா ஞானப்பிரகாசம் அருட்சகோதரி லியோனி திருமதி அன்னம்மா பிலிப்புப்பிள்ளை, திருமதி றோசமுத்து அரசக்கோன், திருமதி பிரிட்ஜெட் வேதநாயகம் அருட்தந்தை S.A. சுவாம்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவர். அன்னாரின் இறுதிச் சடங்குகள் யாழ் மரியன்னை பேராலயத்தில் 13-04-99 அன்று அருள் திரு. ரூபன் மரியாம்பிள்ளை அவர்களால் பலிப்பூசை நிறைவேற்றப்பட்டு, அவரது பூதவுடல் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது

தகவல்
திருமதி மரியம்மா
மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேய்ப்பு பணிச்சபை பொறுப்பேற்றது

தாளையடி, புனித அந்தோனியார் ஆலயத்தின் மேய்ப்புப் பணிச்சபை உறுப்பினர்கள் பங்குனி 14ம் நாள் மாலைத் திருப்பலியின் பின் நடைபெற்ற கூட்டத்தில் தெரியப்பட்டனர். யாழ் மறை மாவட்ட ஆலய மேய்ப்பு பணிச்சபை யாப்புக்கமைய இடம்பெற்ற இத் தேர்வில் பொதுக்குழு உறுப்பினராக எண்மரும் பணிக் குழு சார்பாக முறையே திருவழிபாட்டுக் குழு உறுப்பினராக நால்வரும் நற்செய்திக் குழு உறுப்பினராக நால்வரும் நிதிக் குழு உறுப்பினராக நால்வரும் வலையங்களுடாக தெரிவு செய்யப்பட்டனர். இத்தேர்வினை அருள்திரு யோ.பிரான்சிஸ் அடிகளார் கார்மேல் சபைக் கன்னியர் அருள்சகோதரி அமலி, அருள்சகோதரி பரமேஸ் ஆகியோரின் உதவியுடன் நடத்தி வைத்தார்

க. மரியநாயகம்
தாளையடி நிருபர்

## வார்த்தைகள் இல்லாத இதயம் மேல்

பொது நிலையினர் பிரான்சிஸ்கள் சபையினரின் தவக்காலத்தியானம் 27–02–99 சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமாகியது. நற்கருணை எழுந்தேற்றம் செய்து சபைக் கர்த்தா, குருமுதல்வர் அருள்திரு செல்வராசா அடிகள் தியானத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போது "பிறர் மனந்திரும்புவதற்காக உங்கள் செபங்களை இறைவன் கேட்கிறார்," என்றும் "நற்கருணை வாழ்வின் கொடிமுடி அதற்குரிய வாழ்வு வாழ்வோம்": என்றும் அழைப்புக் கொடுத்தார். அவரின் அழைப்பையடுத்து அருள்தந்தை றெக்ஸ் கொன்சன்ரைன் அடிகள் சபையினரின் உள்ளத்தில் உறையும் வண்ணம் புனித அசிசியாரின் நற்செய்திப் பணி வாழ்வை விதைத்துவிட்டார். "இதயம் இல்லாத வார்த்தைகளைவிட வார்த்தைகள் இல்லாத இதயம் மேல்" என்றும், 5 ஞாயிறு நற்செய்திகளும் மனமாறவும் இருளில் உள்ள மக்கள் ஒளியில் வாழவும் வழி காட்டுவதை, வாழ்வின் சோதனையை வெற்றி கொள்ளும் இறைவழியையும் எம் இதயத்தில் இறக்கிவிட்டார். அத்துடன் மனம் மாற்றம் பெற்று இறைவனை எம் உள்ளத்திலும், இல்லத்திலும் ஏற்று வாழ்வதால் எம்மிலும் எம்மைச் சுற்றிலும் அமைதியின் ஆட்சி அரசோச்சும், நாடும் நலம் பெறும்," எனக் கூறினார். உரையில் உருகிய சபையினர் சங்கீதத்தின் ஊடாக உன்னத தேவனுக்கு ஆராதனை புரிந்தனர்.

தலைவர் L. C. நீக்கிலஸ் அவர்களின் அரும் முயற்சியால் சபையினர் அனைவரும் தியானத்தில் திழைத்து திருவருள் பெற்று 5 மணிக்கு தியானத்தை நிறை செய்தோம்.

தகவல் : J. கில்டா
சகோதரி ஜெயராஜகுலெத்

## ஆசிரியர் தவக்காலத் தியானம்

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சிக் கிளை தனது வருடாந்த தவக்கால தியானத்தை 7-3-99 அன்று பருத்தித்துறை புனித தோமையார் மகளிர் வித்தியாலயத்தில் நடத்தியது.

அருட்தந்தை கிருபாகரன் அவர்கள் தியானத்தை நெறிப்படுத்தினார். இவ்வாண்டின் கருப்பொருளுக்கமைய மனமாற்றத்தை இறைவன் பக்கமிருந்தும் மனிதர் பக்கமிருந்தும் நோக்கி தியானிப்போர் உள்ளங்களில் சிந்தனைகளை எழுப்பினார். இயேசுவின் நற்செய்திக்கு வெளியே சமாதானம் இல்லையென்ற கருத்தை வலியுறுத்தினா பிற்பகல் யோனாஸ் ஆகமம் குழுஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சிலுவைப்பாதைத் தியானமும் இடம் பெற்றது. இத்தியானத்தில் 32 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

திரு. சி. வின்சென்ற்
கரவெட்டி நிருபர்

## யாழ். மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் புதிய தலைவர்கள்

1. பொதுநிலையினருக்கான ஆணைக்குழு
   தலைவர் : அருட்திரு ஆர். எச். சகாயநாயகம்
2. நற்செய்திப் பணிக்கான ஆணைக்குழு
   தலைவர் : அருட்திரு எஸ். யூஜின் பிரான்ஸிஸ்
3. சமூகத் தொடர்புக்கான ஆணைக்குழு
   தலைவர் : அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
4. கலாசார ஆணைக்குழு
   தலைவர் அருட்திரு. ஜெரோ செல்வநாயகம்
5. அசிபாவின் (ASIPA) விருத்திக்கான ஆணைக்குழு
   தலைவர் : அருட்திரு. எம். யேசுரட்ணம்
6. தேவ அழைத்தலுக்கான மறைமாவட்ட இயக்குனர்
   அருட்திரு. றெஜி ராஜேஸ்வரன்
7. மரியாயின் சேனைப் பணியின் ஆன்ம இயக்குனர்
   அருட்திரு. R. H. சகாயநாயகம்
8. புனித வின்சன் டி போல் சபையின் ஆன்ம இயக்குநர்
   அருட்திரு. A. C. கிறிஸ்தோபர்
9. புனித பிரான்ஸிஸ் அசீசியாரின் 3ஆம் சபையின்
   ஆன்ம இயக்குநர்
   அருட்திரு J.P.E செல்வராஜா

## பொன்னையா அடிகளே!
## உங்கள் வாழ்வு பொன் – ஐயா



யாழ் மறை மாவட்டத்தில் மூத்த குருக்களுள் ஒருவரான அருள்திரு பிலிப் பொன்னையா அடிகள் 11.04.99இல் காலமானார் என்பதை பாதுகாவலன் வாசக அன்பர்களுக்கு கவலையோடு தெரிவிக்கிறோம்.

மறைமாவட்டக் குருக்களின் சகாப்தத்தில் முதன்மையானவரும், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வழி காட்டுதலில் வளர்ந்தவரும், யாழ் மறைமாவட்டத்தின் அசைக்க முடியாத உறுதியான தூண்களில் ஒருவருமான அருட்திரு பிலிப் பொன்னையா அடிகளின் இழப்பு ஈடுசெய்யப்பட முடியாததொன்றாகும்.

ஓய்வு நேரங்களில் இயந்திர, தொழில்நுட்ப வேலைகளை செய்வதில் விற்பன்னரான இவர் "இரும்புப் பொன்னையா" என்று குருக்களாலும், மற்றவர்களாலும் அன்போடு அழைக்கப்பட்டு வந்தார். இவர் தமது கட்டுப்பாடான சீவியத்தினாலும், பற்றற்ற வாழ்வினாலும், கடினமான உழைப்பாலும், ஈடுசெய்யப்பட முடியாத ஆன்மீக வாஞ்சையாலும் 59 வருட குருத்துவ வாழ்வை வாழ்ந்து தமது 84 வயதில் இறைவனடி சேர்ந்தார்.

ஆரம்பம் முதல் இறுதி வரை ஆன்மீக வாஞ்சையால் உந்தப்பட்டு, அயராது உழைத்து, வாழ்வாலும், பணியாலும் அனைவருக்கும் சவாலாக விளங்கிய பொன்னையா அடிகளே! உங்கள் வாழ்வு "பொன் - ஐயா"

## நற்செய்தி. . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறைக்கல்வி இயக்குநர் அருள்திரு ஆர். ஸி எக்ஸ். நேசராஜா உரையாற்றுகையில் "இப்பயிற்சிக்குபொருள், ஆள் வளம் ஆகியவற்றில் அதிக முதலீடு செய்துள்ளோம். இவை வீண் போகக் கூடாது. அதிக பலன் கொடுக்க வேண்டும்." எனக் குறிப்பிட்டார். ஈற்றில் "மானிட யாத்திரை" என்னும் நாடகம் மாணவர்களால் மேடையேற்றப்பட்டது.

## அருள்திரு பிலிப் பொன்னையா அடிகளின் வாழ்க்கைக் குறிப்பு

தோற்றம் 02-04-1916 குருத்துவம் 26-03-1940 மறைவு 11-04-1999

| | | |
|---|---|---|
| யூன் 1940 | - செப் 1943 | உதவிப்பங்குத்தந்தை |
| ஒக் 1943 | - டிசம் 1944 | உதவிப்பங்குத்தந்தை - நாவாந்துறை |
| ஏப் 1944 | - ஆகஸ் 1945 | பங்குத்தந்தை - பாஷையூர் |
| ஒக் 1945 | - ஆகஸ் 1947 | பங்குத்தந்தை - அநுராதபுரம் |
| ஆகஸ்1947 | - யூன் 1950 | கற்கைக்கான விடுமுறை |
| யூலை 1950 | - ஆகஸ் 1950 | பங்குத்தந்தை - யாழ். புனித அடைக்கல நாயகி ஆலயம் |
| ஆகஸ்1950 | - ஏப்ரல் 1953 | பங்குத்தந்தை - கரம்பன் |
| மே 1953 | - ஆகஸ் 1956 | பங்குத்தந்தை - செட்டிக்குளம் |
| செப் 1956 | - மே 1961 | அதிபர், புனித மாட்டினார் சிறிய குருமடம் கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமையாளர் |
| மே 1961 | - மே 1963 | பங்குத்தந்தை - கிளிநொச்சி |
| மே 1963 | - மே 1967 | பங்குத்தந்தை - யாழ் பேராலயம் |
| மே 1967 | - ஜன 1968 | பங்குத்தந்தை - சில்லாலை |
| ஜன 1968 | - ஜன 1974 | பங்குத்தந்தை - வவுனியா, மாங்குளம் |
| பெப் 1974 | - ஏப் 1975 | பங்குத்தந்தை - நாரந்தனை விவாக மன்றப் பொறுப்பாளர் |
| மே 1975 | - நவ 1976 | பங்குத்தந்தை - கோப்பாய் |
| நவ 1976 | - ஆகஸ் 1980 | பங்குத்தந்தை - மாதகல் |
| ஆகஸ்1980 | - செப் 1986 | அதிபர், புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக்கல்லூரி |
| ஒக் 1986 | - ஏப் 1991 | பங்குத்தந்தை - யாழ் புனித அடைக்கல நாயகி ஆலயம் |

## திருப்பலிகள் பற்றிய ஒழுங்குகள்

யாழ் மறை மாவட்டத்தில் கடைப்பிடிக்க வேண்டிய திருப்பலிகள் பற்றிய ஒழுங்குகளாவன:

கூட்டுத் திருப்பலிகள் :

1. திருமணச் சடங்கின்போது கூட்டுத் திருப்பலி நிறைவேற்ற அனுமதி இல்லை. மணமகன் அல்லது மணமகளின் சகோதரர் ஒருவர் குருவாக இருந்தால் மட்டுமே கூட்டுப்பலி ஒப்புக் கொடுக்கப் படலாம்.
2. பிரேத அடக்கத்தின் போது பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே கூட்டுப்பலி ஒப்புக் கொடுக்கப் படலாம்.
   அ) ஒரு குருவானரின் மரணம்
   ஆ) அருட் சகோதரி ஒருவரின் மரணம்
   இ) ஒரு குருவானவரின் பெற்றோர் அல்லது சகோதர சகோதரிகளின் மரணம்

ஞாயிற்றுக் கிழமையன்று பிரேத அடக்கம் நடைபெற்றால் அடக்கச் சடங்கின்போது திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படமாட்டாது.

முதற் திருப்பலி

ஒரு குருவானவரின் முதற் திருப்பலியின் போது அவரது உருவாக்கத்தில் நேரடியாகப் பங்கு கொண்ட குருவானவர்களைத் தவிர ஏனையோர் அத்திருப்பலிக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுதல் நன்று. அம்முதற் திருப்பலியில் பங்குபற்றும் கடமையும் உரிமையும் உடையவர்கள் கூட்டுத் திருப்பலியில் பங்குபற்றலாம்.

## பொது அறிவுப் போட்டி

பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலய இளைஞர் மன்றத்தினர் தமது பங்கு மாணவர்களுக்காக மாதாந்த பொது அறிவுப் போட்டி ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். இம்மாதம் முதல் ஆரம்பமாகியுள்ள இப்போட்டியானது அப்பங்கின் இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் அன்னை திரேசா நூலகத்தின் பாவனையை அதிகரிக்கும்முகமாகவும் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து பொது அறிவில் அவர்கள் வளர்ச்சி அடைவதற்காகவும் நடத்தப்படுகின்றது. நூலக பெயர்ப்பலகையில் மாதா மாதம் போடப்பட உள்ள பொது அறிவு வினாக்களுக்கான விடைகளை மாணவர்கள் நூலகத்தில் இருந்தே தேடி எடுக்கலாம். அதிகப் புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் உள்ளன.

கி. எமில் செல்மர்

வீட்டுக்கொரு பாதுகாவலன் விசுவாசத்தின் பாதுகாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான்வீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197